# ஹஜ்ஜின் மூலம் நாடப்படுவதென்ன

ஆக்கியோன்:
காலித் பின் ஸாலிஹ் அஸ்ஸலாமா

தமிழில்:
முஹம்மத் ரிஸ்மி ஜுனைத் (அப்பாஸி)

வெளியீடு :

ரப்வா அழைப்பு நிலையம்

ரியாத்

# من مقاصد الحج

تأليف

خالد بن صالح السلامة

ترجمة

محمد رزمي محمد جنيد

الناشر

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة

الرياض

IslamHouse.com

பயனுள்ள கல்வியையும் ஸாலிஹான நல்லமல்களையும் கொண்டு தனது நேசர்களை சங்கைப்படுத்தியவனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தானது. அந்நேசர்களின் அறிவின் பயனாக தன்னை அஞ்சி நடப்பதையும், தன்னிடமே மன்றாடுவதையும் அவன் அமைத்து வைத்துள்ளான். இக்கல்வி மூலம் சிலரை உயர்வடையச் செய்து மனிதரில் உயர்வுடையோராக ஆக்கிவைத்துள்ளான். அக்கல்வி மூலம் சில உள்ளங்களை நிரப்பியதன் மூலம் அவன் மீது அன்பு காட்டவும், மறுமையில் அவனை சந்திக்க ஆசைகொள்ளவும், அவனெதிரே நீண்ட நேரம் நிற்பதற்கும் சில உறுப்புகளை ஏற்படுத்தியும் வைத்துள்ளான்.

தன் இறைவனை அறிந்து, அவனை நினைவுபடுத்துவதிலே ஈடுபட்டு, தன் அடிமைத்தனத்தையும் தொழுகை, ஹஜ், வாழ்வு, மரணம் என்பவற்றையும் அவ் இறைவனுக்கென்றே தூய்மையாக்கியதால், அல்லாஹ் அவரைத் தெரிவு செய்து நேசித்து, பொருந்திக் கொண்டது மட்டுமல்லாமல், தனது படைப்பினங்களையும் பொருந்திக் கொள்ளச் செய்தானே அப்படிப்பட்ட சிரேஷ்ட நபி மீது ஸலவாத்தும், ஸலாமும் உண்டாவதாக!

எம் இறைவா! அனைத்து ஞானமும் உம் கரமேயுள்ளது. அதில் உனக்கு விருப்பமானதை எனக்கு தந்தருள்வாயாக! அதன் மூலம் எமது அந்தஸ்த்தை உன்னிடம் உயர்த்தி விடுவாயாக! இறைவா! அதன் மூலம் எமது நல்லறங்களை அதிகப்படுத்தி எமது பாவங்களையும் மன்னிப்பாயாக! மேலும் அதன் மூலம் எமது உள்ளத்தை விசாலப்படுத்தி, உனக்கென்ற

தூய்மையான எண்ணத்தையும் தந்தருள்வாயாக! எமது எண்ணம், சொல், செயல் என்பவற்றில் உனக்கு விருப்பமான உனது திருப்திக்குரியதை அடைந்துகொள்ள பேரருள்புரிவாயாக!

முஸ்லிமான ஹாஜிமார்களே!

உலகைப் படைத்துப் போசிக்கும் இறைவனுக்கு தன்னை முற்றிலும் ஒப்படைப்பது என்பது எவ்வளவு அழகானது. அவ்வாறு செய்வது விசுவாசிகளின் அடையாளமாகும். எந்த ஒரு அடியான் தன்னை ஒப்படைப்பதற்கு மேலால், அறிவில் கூடுதலான உயர்வைப் பெறுகிறானோ அவன் அல்லாஹ்வின் நெருக்கத்தை அதிகமாக பெற்றுக்கொள்கிறான்.

எனவே எம் இறைவா! எம்மை உமக்கே ஒப்படைப்பதையும், அறிவையும், நல்ல அமல்களையும் அதிகரித்தருளச்செய்வாக!

அதைவிட அழகானது யாதெனில் நீர் அல்லாஹ்விடம் உமக்கு அறிவை அதிகரிக்கச் செய்யுமாறு கேட்பதும், அதற்கவன் விடையளித்து, அறிவின் வாசலைத் திறந்து அதன் மூலம் நீர் ஹஜ்ஜின் கிரியைகள் சிலவற்றிலுள்ள தத்துவத்தைப் புரிந்து கொள்வதாகும். அல்லாஹ் கூறுகிறான்: "மேலும் எவர்கள் நம்முடைய வழியில் முயல்கின்றார்களோ நிச்சயமாக அவர்களை நம்முடைய நேரான வழிகளில் நாம் செலுத்துவோம்; நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கின்றான்". (அல்குர்ஆன் 29:69).

மக்கா பயிர்பச்சைகளற்ற, அருவிகளோ காடுகளோ அற்ற, அல்லாஹ்வுக்காக விருப்பத்தோடு உம்ரா மற்றும் ஹஜ் செய்யச் செல்வோர் அனுபவிக்கும் வண்ணமும்

இருக்காமல் பாலையாக, வனாந்தரமாக இருப்பது ஏன் என்பதை நாம் அறிவது எவ்வளவு ஏற்றமானது.

இறுதி ஹஜ்ஜின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பாதங்களோ, உடம்போ அறபா பூமியைத் தொடாமை என்பது அன்னாரின் தனிச்சிறப்புக்களைச் சேர்ந்ததாக ஏன் இருக்கவேண்டும்?

விசாலமாக்கிக் கொடுக்கும் வல்லமை பொருந்திய, சர்வ ஞானமிக்க அல்லாஹ் அமைத்துத் தந்துள்ள ஏனைய வணக்கங்களுக்கு மாறாக ஒரு சிறிய இடத்திலே கல்லெறிவதும், தவாப் செய்யும் இடத்திலே ஆண்,பெண் இரண்டரக் கலப்பதும் ஏன்?

மினாவோ அவ்வேளை எமக்கு மிக அருகாமையிலும், எமது ஆடைகளும், விரிப்புக்களும் அங்கு இருக்கின்ற நிலையிலும் நாம் அறபாவிலிருந்து மீண்டுவரும் போது கட்டாயம் முஸ்தலிபாவில் ஏன் தங்க வேண்டும்?

இவ்வாறான அனேகமான மாபெரிய தத்துவங்கள் ஹஜ்ஜிலும், உம்ராவிலும் இருக்கின்றன. ஹஜ்ஜின் கிரிகைகள் அனைத்திலும் நுண்ணிய நோக்கங்களும், மாபெரிய தத்துவங்களும் உள்ளன. அதனை அறிந்தோர் புரிந்துகொண்டனர். அறியாதோர் அறியாமையிலாயினர்.

இதுவே உங்களின் சிந்தனைகளைக் கிளப்பிவிடவும், உங்களின் கவனத்தை ஈர்த்தெடுக்கவும் அல்லாஹ்வின் உதவி வேண்டியவனாக இச்சிறிய வரிகளினூடாகக் கூற விரும்புகிறேன்.

இதன் மூலம் நான் சன்மார்க்க சட்டங்களைக் கூற எண்ணவில்லை. அதனை புகஹாக்கள் நூல்களில் வரிவரியாக எழுதிவிட்டனர். எனினும் நான் ஹாஜிகள்

கவனயீனமாக உள்ள மாபெரிய தத்துவங்கள் சிலதை குறிப்பிடவே விரும்புகிறேன். சன்மார்க்கத்தை அறிந்த எத்தனையோ பேர் அதனை விட அறிந்தவர் பால் தேவையானவர் என்ற நபி மொழிக்கேற்ப ஹஜ்ஜு பற்றி எழுதியோருக்குப்படாததையும் எழுத விளைகிறேன்.

ஹஜ்ஜின் தத்துவங்களை இதனை விட விரிவாக, தெளிவாக எழுத வேறு எவரும் ஆற்றல் பெறலாம். ஆதலால் நல்ல முறையில் இது அமைந்திருந்தால் அது அல்லாஹ்வின் பேரருள் மாத்திரமே. இதிலே ஏதும் தவறுகள், பிழைகள் காணப்படின் அது என் கவனயீனத்தினாலும், சைத்தானின் வழிகாட்டலாலும் நிகழ்ந்ததே அன்றி வேறில்லை.

## ஹஜ்ஜை நிறப்பமாக நிறைவேற்றல்

அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்,: “அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும், உம்ராவையும் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள்.” (அல்குர்ஆன் 02:196) பரிபூரணத்துவம் மூன்று வகையாக நிகழும். 1- காலத்தால் ஹஜ்ஜைப் பூரணப்படுத்தல், 2- இடத்தால் பரிபூரணப்படுத்தல், 3- செயலால் பூரணமாக்குதல்.

அதன் விபரமாவது,

**1- காலத்தால் பரிபூரணமாகுதல்:**

அல்லாஹ் விதித்த காலத்தில் சற்றும் முந்தவோ, பிந்தவோ செய்யாது நிறைவேற்றல். ஹஜ்ஜின் கடமைகள் ஒவ்வொன்றும் நேரம் வரையறுக்கப் பட்டதாகும். இவ்வாறு வரையறுக்கப்பட்டதன் மூலம் நாடப்பட்ட நோக்கம் அதன் மூலமன்றி நிறைவேறாது. அல்லாஹ் விதித்த காலத்தையிட்டு கவனயீனமாக இருந்தவர் இந்த நோக்கத்தை பரிபூரணப்படுத்துவதில் அசிரத்தை காட்டியவனாகக் கருதப்படுவான்.

“அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும், உம்ராவையும் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள்” (அல்குர்ஆன் 02:196) என்றும், “குறிப்பிடப்பட்ட நாட்களில் அல்லாஹ்வை நினைவுபடுத்துங்கள்”(அல்குர்ஆன் 02:203) என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்.

எனவே உதாரணத்திற்கு சிலவற்றைக் கூறுகிறோம்:

1. முஸ்தலிபாவில் இரவு தரிக்காது அவசரப்பட்டுச் சென்றுவிடுதல்,

2. அல்லது நடுநிசிக்கு சிறிது முன்பாக அங்கிருந்து வெளியேறல்,

3. மினாவில் தங்கியிருக்கும் நாட்களில் பன்னிரண்டாவது நாளன்று லுஹருக்கு முன்பே கல்லெறிதல்.

இவையெல்லாம் ஹஜ்ஜின் நோக்கத்தில் முரண்பாடு அல்லது குறையைத்தான் ஏற்படுத்தும்.

**2. இடத்தால் பரிபூரணமாகுதல்:**

அதாவது ஹஜ் நிறைவேற்றப்பட வேண்டிய இடங்களில் அதன் கிரியைகள் நிறைவேற்றப் படுவதாகும்.

ஒவ்வொரு இடத்துக்குமான தனித்துவங்கள் உள்ளன. அவ்விடங்களிலன்றி குறித்த கருமங்கள் நிறைவேராது. அவ்விடயத்தில் யார் கவனயீனமாக நடப்பாரோ, அவர் இவ்வணக்கத்தின் தனித்துவத்தை நிறைவுசெய்து கொள்வதில் அசிரத்தை காட்டியவராவார்.

உதாரணமாக, ஹஜ்ஜுக்குச் செல்லும் நாம் அரபாவிலே தரித்து நிற்க வேண்டும் என அல்லாஹ் நாடி, அதற்கான எல்லைகளையும் நிர்ணயித்துள்ளான். அதனை நாம் தாண்டிச் செல்லலாகாது. மேலும் முஸ்தலிபாவிலே இரவில் முழுவதையும் அல்லது அதில் பெரும்பகுதியைக் கழிக்க வேண்டுமெனக் கூறியுள்ளான். அவ்வாறே ஏதேனும் தங்கடம் ஏற்பட்டாலேயன்றி குறிப்பிட்ட இரவுகளில் மினாவிலே இரவைக் கழிக்க வேண்டுமெனவும் கூறியுள்ளான். தற்போதுள்ளது போன்று இடநெரிசல் காரணமாக மினாவுக்கு வெளியே நிற்பதானது தங்கடத்தினாலாகும். அது இடத்தால் பரிபூரணப்படுத்தியதாகக் கருதப்படும்.

கல்லெறிதல், தவாப், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடுவது போன்ற சில அமல்கள் காலத்தாலும், இடத்தாலும் மிகவும் குறுகியதாகவே அமைக்கப்பட்டுள்ளன. ஹாஜிகள் நெரிசலில் சிக்கித் தவிப்பார்கள் என்று அதனை இலகுபடுத்துவதற்காக அதன் காலம் வாரங்களாக, மாதங்களாக அமைக்கப்படவோ, குறித்த இடங்கள் எல்லையை விட்டும் விசாலமாக்கப்படவோ இல்லை.

காலாகாலமாக இவ்வாறே இருந்து வருகிறது. தொகையைக் குறைப்பதற்காக பெண்களை தவிர்த்து ஆண்களுக்கு மட்டுமென்றோ, விருப்பத்துக்குரியவர்கள் நிறைவேற்றலாம் என முஸ்தஹப்பான அமலாகவோ எமக்கு அமைத்துத் தரப்படவில்லை. மாறாக அக்கிரியைகள் ஆண்,பெண் இருபாலாரும் நெருக்கமான இடத்தில், நெரிசலான நேரத்தில் செய்ய வேண்டிய கடமையாக இருக்கின்றன. அல்லாஹ் நன்கறிந்தவனும், ஞானமிக்கவனுமாக இருக்கின்றான். கடும் நெரிசல், ஒன்றரக் கலந்திருத்தல் போன்றவற்றால் ஏற்படும் சட்டதிட்டங்கள் அவனுக்கு மறையமாட்டாது. எனினும் இவை ஏதோ சில நோக்கங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. சகலதும் அறிந்த நுண்ணிய அறிவுடைய அல்லாஹ்வின் நாட்டமே இது.

**3. செயல் மூலம் பரிபூரணமாகுதல்:**

அது மூன்று வகையான சட்டங்களை கவனத்திலெடுப்பதன் மூலம் நிறைவேறும்.

1. ஹஜ்ஜின் நோக்கம்,
2. அது சாந்த சட்டங்கள்,
3. ஹஜ்ஜின் போது காணப்படும் சமூக நலன்கள்,

**முதலாவது விடயம்** பற்றி பின்னர் பேசப்படும்.

**இரண்டாவது விடயம்:** ஹஜ்ஜு சார்ந்த சட்டங்களாகும்.

அவையாவன கட்டாயமானவை (வாஜிபுகள்), விருப்பத்திற்குரியவை (முஸ்தஹப்கள்), அனுமதிக்கப் பட்டவை (முபாஹ்), வெறுக்கப்பட்டவை (மக்ரூஹ்), தடுக்கப்பட்டவை (ஹராம்) என்பனவாகும். இதுபற்றி

அறிஞர்கள் விரிவாகவும், தெளிவாகவும் கூறியுள்ளார்கள். இங்கு நான் கூறவேண்டிய தேவையில்லாத அளவுக்கு மக்கள் இது தொடர்பாக அதிகமாக கேட்டுள்ளனர்.

**மூன்றாவது விடயம்:** ஹஜ்ஜை சம்பூரணப்படுத்த உதவும் சமூக நலன்கள் சார்ந்தவை. போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், தங்குமிட வசதிகள், மேலும் இன்னோரன்ன விடயங்கள் இதில் அடங்கும்.

மக்கள் சிலவேளைகளில் இவ்விடயத்தைப் பேணி நடப்பதில் கவனயீனமாக நடப்பது ஹஜ் நிறைவேற்றப்பட வேண்டிய இடங்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைய முடியாத சிக்கல்களைத் தருகிறது. அல்லது மிகச் சிரமப்பட்டே அந்த வணக்கங்களைச் செய்யவும் வேண்டியேற்படுகிறது. சகலரும் சமூக நலன்களைக் கருத்திற்கொண்டு செயல்படுவார்களாயின் மிக இலகுவாகவும், சுலபமாகவும் புனதிக் கடமையை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

**கேள்வி என்னவெனில்.....**

மேலே அல்லாஹ் "அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும், உம்ராவையும் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள்"என்று கட்டளையிட்டது போல் இந்த மூன்று விதமான பரிபூரணத்தையும் அடைந்துகொள்வது எப்படி?

அதற்குப் பதிலாக பின்வருமாறு நாம் கூறலாம்.

1. இம்மூன்று வகைகளையும், அதன் யதார்த்தங்களையும் கற்க முயற்சிப்பது. நாம் முயன்றால் அல்லாஹ் தனக்குத் திருப்தியான நேர்வழியைக் காட்டுவான். இது பற்றி அல்லாஹ், "மேலும் எவர்கள் நம்முடைய வழியில் முயல்கின்றார்களோ நிச்சயமாக

அவர்களை நம்முடைய நேரான வழிகளில் நாம் செலுத்துவோம்; நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கின்றான்.” என்று குறிப்பிடுகிறான். (அல்குர்ஆன் 29:69).

இந்த நோக்கங்களை விளங்க வைக்குமாறு அல்லாஹ்விடம் துஆக்கேட்பதும் மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டுள்ள முயற்சியிலுள்ளதாகும். “இறைவா! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக!” என்றும் நீர் பிரார்த்தனை செய்வீராக!” (அல்குர்ஆன் 20:114). அவ்வாறே அல்குர்ஆன், அஸ்ஸுன்னா தரும் வஹியின் வார்த்தைகளை நீண்டு சிந்திப்பது, அறிஞர்களிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வது, குறித்த நோக்கங்களைக் கொண்ட புத்தகங்களை வாசிப்பது, கல்வி சம்பந்தமான சபைகளுக்கு சமூகமளிப்பது ஆகிய இவை அனைத்தின் மூலமாகவும் நாம் முயல்வதன் மூலம் மேலே கூறப்பட்ட வினாவுக்கு விடை காணலாம்.

2. சம்பூரணமாக அதனை அடைந்துகொள்ள முயற்சித்தல். அல்லாஹ் கூறுகிறான், “உங்கள் இறைவனால் உங்களுக்கருளப்பட்ட அழகானவற்றைப் பின்பற்றுங்கள்.” (அல்குர்ஆன் 39:55). இது எல்லா வணக்கங்களுக்கும் இடப்பட்ட கட்டளையாகும். சோம்பல்பட்டு, ஓய்வுதேடி, அளவுமீறி, அசிரத்தை செய்து ஆசைக்கு வழிபடுவதன் மூலம் நாம் அவசரப் படலாகாது. இவ்வுலகம் தாண்டிச் செல்லுமிடமாக, அமல் செய்வதற்குரிய இடமாக இருக்கிறது. சுவனமோ நற்கூலிக்குரிய நிரந்தர இடமாகும்.

3. அறியாமை, மறதி போன்ற மார்க்கம் அனுமதித்த நியாயங்களால் சம்பூரணமான முறையில் நிறைவேற்ற முடியாமற்போனமைக்காக வருந்த வேண்டும்.

அப்படியானால் நாம் அதிகமதிகம் இஸ்திஃபார் எனும் பிழைபொறுக்கத் தேடுவதிலும், அல்லாஹ் அதை அங்கீகரிக்க வேண்டுமெனக் கேட்பதிலும் ஈடுபடுவோமாக. அல்லாஹ் பரிபூரணமாக செய்ய முடியாமற் போனதை அவனது தயாளத்தாலும், கருனையாளும், கொடையாளும் நிறைவு செய்யலாம். நாமும் ஹஜ்ஜிலிருந்து மீளும் போது எமது ஹஜ்ஜை அல்லாஹ் சம்பூரணமாக்கி, அங்கீகரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடும், எமது அமல்களில் குறைவுகள் காணப்பட்டு, தூக்கியெறியப்படுமோ என்ற பயத்தோடும் வருவோமாக.

இங்கு நாம் ஹஜ்ஜின் நோக்கங்களில் முதல் வகையான செயலால் பூரணப்படுத்துவது பற்றிப் பார்ப்போம்.

ஹஜ்ஜின் நோக்கம் என்பது, அதன் பயன்கள், அது விதியாக்கப்பட்டதன் நோக்கம் என்பவற்றைக் குறிப்பிடுகின்றது.

ஹஜ்ஜின் மாபெரிய நோக்கமானது அல்லாஹ்வுக்கென்று தன் அடிமைத்துவத்தை உறுதிப்படுத்துவதாகும். அது அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நடப்பதன் மூலம் நிறைவேரும். அல்லாஹ் கூறுகிறான், “இன்னும் அதற்கு(ச் செல்வதற்கு)ரிய பாதையில் பயணம் செய்ய சக்தி பெற்றிருக்கும் மனிதர்களுக்கு அல்லாஹ்வுக்காக அவ்வீடு சென்று ஹஜ் செய்வது கடமையாகும்.” (அல்குர்ஆன் 03:97). இந்த நோக்கத்தை ஒவ்வொரு ஹாஜியும் அறிதல் வேண்டும். அறியவில்லையென்று நியாயம் கூற எவருக்கும் இயலாது.

அல்லாஹ்வுக்கென்றே தன் அடிமைத்துவத்தை உறுதிப்படுத்தல் என்பதுவே ஹஜ்ஜின் பெரிய

நோக்கமாகும். அதற்கென ஏற்படுத்தப்பட்ட முறையிலன்றி இம்மாபெரிய நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாது. அதாவது அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வது, அவனை கண்ணியப்படுத்துவது, அவனையே ஆதரவு வைப்பது, அவனுக்கே அஞ்சி நடப்பது, அவன் மீதே தவக்குல் எனும் பாரம்சாட்டுவது, அவன்பாலே மீண்டு தவ்பா செய்வது போன்றன ஹஜ்ஜுக்கென அமைக்கப்பட்ட முறைகளாகும். இதனை நோக்காகக் கொண்டே ஹஜ்ஜு விதியாக்கப்பட்டது. அதனைக் கற்பதும், விளங்குவதும், அந்த விளக்கத்தைப் பெற முயற்சிப்பதும், அதனை அடைந்து கொள்வதும் மக்கள் மீது விதியாக்கப்பட்டுள்ளது. எனினும் இவைகளில் மக்கள் ஏற்றத்தாழ்வோடு வித்தியாசப்படுகின்றனர்.

இவற்றை விரிவாக அறிய வேண்டுமென்பது ஹாஜிகள் மீது கடமையில்லை. எனினும் அவற்றை அறிவதற்கேற்ப கூலியும் அந்தஸ்த்தும் அல்லாஹ்விடம் கிடைக்கும். அல்லாஹ் கூறியுள்ளது போன்று தம் விளக்கத்திற்கேற்ப வேறுபட்ட கூலிகளைப் பெறுவர். “நபியே!) நீர் கூறும்: “அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா?” (39:09). என்று அல்லாஹ் கூறுகிறான்.

இங்கு நாம் ஹஜ்ஜின் நோக்கங்களை சிந்தித்து, உன்னிப்பாகக் கவனித்து, ஒரு அமைதியான வலம் வர விரும்புகிறோம். அதன் மூலம் அல்லாஹ் எமது ஈமானையும், நல்லமல்களையும் சீராக்கி வைக்க வேண்டுமெனவும், அவனிடமே சரணடைவதையும், அவன் திருப்திக்குரிய வழியில் ஸ்திரத்தன்மையையும் தந்தருளக் கேட்பதும் போலவே மேற்சொன்னவற்றையும் எதிர்பார்க்கிறோம். “என் இறைவா! எனக்கு அறிவை அதிகரிக்கச் செய்வாயாக”

ஹஜ்ஜின் பிரதான நோக்கம் அல்லாஹ்வுக்கென்று அடிமைத்துவத்தை உறுதிப்படுத்துவது என்ற விடயம் முன்னர் கூறப்பட்டது. அந்நோக்கங்கள் பல்வகை விடயங்களை உள்ளடக்கியுள்ளன. அவையென்ன ? அல்லது ஹஜ்ஜின் நோக்கங்களை எவ்வாறு அடைந்து கொள்வது? என்பதே இங்குள்ள வினாவாகும். அல்லாஹ்வின் உதவியால் அதனை இங்கு விளக்க முயற்சிக்கிறேன்.

## முதலாவது நோக்கம்

## அல்லாஹ்வின் அன்பை உறுதிப்படுத்துவதாகும்

அல்லாஹ் கூறுகிறான், “(நபியே!) நீர் கூறும்: உங்களுடைய தந்தைமார்களும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார்களும், உங்களுடைய குடும்பத்தார்களும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நஷ்டம் (எங்கே) ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும், அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதையும் விட உங்களுக்கு பிரியமானவையாக இருக்குமானால், அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை)க் கொண்டுவருவதை எதிர்பார்த்து இருங்கள் - அல்லாஹ் பாவிகளை நேர்வழியில் செலுத்துவதில்லை.” (அல்குர்ஆன் 09:24).

உன் வாழ்வில் உன் நேசத்துக்குரிய எல்லோரையும் விட்டுப் பிரியாமல் ஹஜ்ஜை

நிறைவேற்ற இயலாது என்பதைப் பற்றி சிந்தித்துப் பார். நீ விரும்பும் உனது தாயகத்தை, உனது அன்புக்குரிய மனைவியை, உனது மலர்களான குழந்தைச் செல்வங்களை, நீ வாழும் வீட்டை, நீ வளர்ந்த கிராமத்தை, தொழிலை, விவசாய நிலத்தை, வாகனத்தை, உன் சந்ததி தொடர்பான உறவுகளைப் பிரிந்தேயன்றி நீ ஹஜ்ஜை நிறைவேற்ற முடியாது.

இவையெல்லாம் உன் விருப்பத்திற்குரியன. மீண்டும் திரும்பிச் செல்வாயா என்பது கூட உனக்கு தெரியாத நிலையில் இவற்றை விட்டுவிட்டு நீ பிரயாணமாகிறாய். இவற்றை நீ விட்டுச் செல்கையில் பயனுள்ள பள்ளத்தாக்குகள், பசுமையான காடுகள், விசாலமான இடம், நல்ல சீர்தோஷனம் என்பவற்றை நாடிச்செல்வதில்லை. எனினும் நெருக்கமான, கடும் உஷ்னமுடைய, பயிர்பச்சைகளற்ற பள்ளத்தாக்கை நோக்கியே முன்னோக்கிறாய். உனக்கு விருப்பமான ஒன்று உன்னோடிருக்கையில் நீர் அங்கு போய்ச் சேர்ந்தால், அல்லாஹ்வுக்கென்று மாபெரிய தூய்மையை உறுதிப்படுத்துவதற்காய் உனக்கு விருப்பத்திற்குரியதை நீ விட்டாகவேண்டும்.

உன் அன்புக்குரிய மனைவி, பெறுமதிமிக்க ஆடைகள், நறுமணம் கமழும் வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நீ எடுத்துச் சென்றாலும் இஹ்ராம் அணிவதோடு அவை உனக்கு தடுக்கப்படுகின்றன. நீ அவற்றை விட்டுவிட வேண்டும்.

அதே நேரம் விருப்பத்திற்குரிய மாபெரிய எத்தனையோ அம்சங்கள் மக்காவில் உள்ளன. மஸ்ஜிதுல் ஹராம், சங்கைமிகு கஃபா, ஹஜருல் அஸ்வத், மகாமு

இப்றாஹிம், ஸம்ஸம் கிணறு, புனித பூமி மக்கா இவையனைத்துமே விருப்பத்திற்குரியதன்றோ!!

ஹஜ்ஜின் நோக்கங்களைச் சேர்ந்ததே – அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன் – அடியாரை சோதிப்பதும், பரீட்சிப்பதும். மேற்குறித்த அனைத்தை விடவும் அல்லாஹ்வின் அன்பு மிக விருப்பத்திற்குரியதெனின் அவை அனைத்தையும், புனித ஹரத்தின் எல்லையை விட்டும் வெளியேறிவிட வேண்டும். அது ஹஜ்ஜுடைய நாட்களில் மிகவும் சங்கை பொருந்திய நாளான அறபா நாளாகும். அது அமைந்துள்ள இடத்திற்குச் செல்ல வேண்டும். அது ஹரத்தின் எல்லைக்கு வெளியே இருக்கின்றது. இப்பூமியில் விருப்பத்திற்குரிய எதுவுமே கிடையாது. மாறாக ஏக இறைவனின் அன்பே விருப்பமாய் இருக்கும். இதன் மூலம் நிச்சயமாக அல்லாஹ்வின் அன்பே மற்ற அனைத்தின் அன்பை விடவும் அடியானுக்கு விருப்பத்திற்குரியதாக இருக்கும். இது அல்லாஹ்வுக்கென்ற கலப்பற்ற உண்மையான அன்பு என்பதை சொல்லாலும், செயலாலும் காட்டுவதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

**வினா:**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சங்கைமிகு உடம்பு அல்லது பாதங்கள் அரபா பூமியில் பட்டதற்கான சரியான ஆதாரங்கள் உண்டா?

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹஜ்ஜின் முறைகள் பற்றி விரிவாகப் பேசியுள்ள அநேகமான நல்ல கிரந்தங்களில் ஆராய்ந்து பார்த்தேன். அன்னாரின் சங்கை பொருந்திய உடம்பு அரபா

பூமியில் பட்டதற்கான எந்த ஆதாரத்தையும் நான் காணவில்லை. மாறாக அன்னாரின் உடம்பு அரபா பூமியில் படவில்லை என்பதற்கான ஆதாரங்களே கிடைத்தன. இது நபியவர்களுக்கு மாத்திரம் உரித்தான சட்டமன்றி உம்மத்தவர்களுக்கல்ல. அவ்வாதாரங்களைச் சேர்ந்தது தான் அன்னார் அரபா செல்லும் போது அல்லாஹ் இட்ட சில கட்டளைகள். அவை சிந்தனைக்குரியதாகும்.

அரபா எல்லைக்கு சற்று முன்னுள்ள “வாதீ உரணா” என்ற இடத்தில் நபியர்களுக்கு நிற்கவும், உண்ணவும், குடிக்கவும், ஓய்வெடுக்கவும், அரபாவுக்கு வெளியே வுழூ செய்துகொள்ளவும் அல்லாஹ் கட்டளையிட்டான். பின்பு சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்ததும் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் தம் தோழருக்கு அரபா பூமியில் ஓரிரண்டு மீட்டர் நுழையுமாறு கட்டளையிட்டார்கள். அன்னார் அரபாவின் எல்லையைவிட ஓரிரண்டு மீட்டர் தொலைவில் நின்றவண்ணம் குத்பா பிரசங்கம் செய்து, தொழுகையையும் நடத்தினார்கள். ஸஹாபாக்களோ அரபாவில் இரண்டொரு மீட்டருக்குள் தரித்திருந்தனர்.

குத்பாவையும், தொழுகையையும் முடித்துக் கொண்ட பின்னர் தன் ஒட்டகையில் ஏறி அரபாவுக்கு வெளியே இருந்த அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். அவ்வாறு நுழைந்த நபியவர்கள் சூரியன் மறையும் வரை தன் ஒட்டகத்திலே இருந்தார்கள். “ஹஜ்ஜதுல் வதா∴” வின் போது அன்னாரது திருப்பாதங்கள் அரபாப் பூமியை தொடவே இல்லை என்றே அதிகமான ஆதாரங்கள் கூறுகின்றன. இது அன்னாருக்கென்று அல்லாஹ் இட்ட கட்டளையாகும். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

**வினா:**

“ஹஜ்ஜதுல் வதா ஃ” வின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சங்கை மிகுந்த பாதங்கள் ஏன் அரபா பூமியில் படவில்லை ?

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு முஃமினிடத்திலும் விருப்பத்திற்குரியவர். அவ்வாறே அன்னாரது அடையாளங்களும் விருப்பத்திற்குரியனவே. ஏன்! மனிதர்களில் அதகமானோரும் அவை பற்றியே தேடுவதுண்டு. அரபா மைதானத்திலே அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த ஒரு அன்புக்குரியவரின் அடையாளமும் – அது அல்லாஹ்வின் தூதருடைய அடையாளமாக இருந்தாலும் சரியே – இருக்கலாகாது என்றே அல்லாஹ் நாடியுள்ளான்.

சில வேளை அதன் தாத்பரியம் பின்வருமாறு இருக்கலாம். அரபாவிலே அல்லாஹ்வின் தூதருடைய அடையாளம் ஏதும் இருந்தால் அரபா நாளன்று படைத்தவனான அல்லாஹ்வின் அன்பை விட்டும் படைக்கப்பட்டவரான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பக்கம் உள்ளங்கள் திரும்பி விடும்.

ஏனில்லாமல் !!.. மனித சமூகத்தின் வழிகேட்டுக்கு அதிகமாக அமைந்திருந்தது நல்லடியார் மீதும், அவர்களது அடையாளங்கள் மீதும் கொண்ட அளவுமீறிய அன்பாகும் என்பது வெளிப்படையே..

இப்புவியில் தோன்றிய முதலாவது இணைவைத்தல் ஸாலிஹான நல்லடியார்களினதும்,

அவர்களது அடையாளங்கள் மீதும் கொண்ட அளவற்ற அன்பல்லவா!?

நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது கொண்ட அளவற்ற அன்பின் காரணமாக கிறிஸ்தவர்கள் வழிகெடவில்லையா?

அவ்வாறே அலி ரழியல்லாஹு அன்ஹு, ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோர் மீது அளவற்ற அன்பைக் காட்டி ராபிழாக்கள் வழிகெட்டுப் போகவில்லையா?

அப்துல் காதிர் ஜீலானி, மற்றும் சிலர் மீது கொண்ட அளவற்ற அன்பினால் ஸூபிஹள் வழிகெட்டுச் சென்றனர். அல்லாஹ்வுக்கு நிகரான அன்பை அவர்கள் மீது காட்டி வழிகெட்டனர். அழிவிலும் சேர்ந்தனர்.

இவ்வாறே அரபாவில் ஹாஜிகளும் நேசம் கொள்ளும் ஒருவனாக அல்லாஹ் மாத்திரம் இருந்து வர வேண்டும் என்றும், வேறு எவரது அடையாளங்களும் அந்த அன்புக்குரிய அல்லாஹ்வின் அன்பைவிட்டும் திரும்பிவிடலாகாது என்பதுமே அல்லாஹ்வின் நாட்டமாகும்.

சிலவேளை அல்லாஹ் மனிதனை பின்வருமாறு சோதிக்கிறான். மனிதனுக்கு முற்றிலும் அவசியமான ஒன்று குறுக்கிடுவதன் மூலம் அந்த அன்பு பரீட்சிக்கப்படுகிறது. என்றாலும் அதனை தடுப்பதன் மூலம் அல்லாஹ் அவனை சோதிக்கிறான். அது அல்லாஹ்வா? அல்லது நேசம்கொள்பவரா? முக்கியமானவர் என்பதே அந்தச் சோதனை.

இதோ ஸஹாபாக்கள் மிகவும் பசியுடனும், பட்டினியுடனும் இருந்த ஒரு நேரத்தில் ஹஜ்ஜுக்காக

இஹ்ராம் அணிந்தார்கள். இஹ்ராமை அணிந்து முடிவதற்குள் தோழர்களுக்கு விருப்பத்திற்குரிய வேட்டைப் பொருட்கள் அவர்களுக்கு மிக அண்மையில் வந்தன. அவர்களது கையிலே ஈட்டியும், அம்பும் இருந்தது. வேட்டையாடியிருக்கலாம். ஆனால் இஹ்ராமோடு வேட்டையாடுவது தடை என்பது பெரும் சோதனையாகவே இருந்தது. அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான், "ஈமான் கொண்டவர்களே! (நீங்கள் இஹ்ராம் உடை அணிந்திருக்கும் நிலையில்) உங்கள் கைகளும், உங்கள் ஈட்டிகளும் சுலபமாக வேட்டையில் அடையக்கூடிய பொருளைக்கொண்டு நிச்சயமாக அல்லாஹ் உங்களை சோதிப்பான்; ஏனென்றால் மறைவில் அவனை யார் அஞ்சுகிறார்கள் என்பதை அல்லாஹ் அறி(விப்ப)தற்காகத்தான்; இதன் பின்னரும் எவர் வரம்பு மீறுகிறாரோ அவருக்கு நோவினை தரும் வேதனையுண்டு." (அல்குர்ஆன் 05:94). எந்தவொரு கண்காணிப்பவரோ, விசாரிப்பவரோ இல்லாத போது தமது இன்றியமையாத் தேவை இருந்தும் கூட அல்லாஹ்வுக்கு வழிபட்டதன் காரணமாக வேட்டையாடுவதை விட்டுவிட்டு அல்லாஹ்வின் மீதுள்ள அன்பை ஒருமைப்படுத்தி, உறுதிப்படுத்திய ஸஹாபாக்களின் பெருந்தன்மை தான் என்ன!!

தவாஃபின் போதும், கல்லெறிகின்ற போதும் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பிலே சோதனைகள் கடுமையாவதுண்டு. தனக்குரிய ஹலாலான மனைவி, வேட்டையாடுதல் போன்றவற்றை விட்டும் ஒதுங்கி நிற்கும் ஹாஜிகள் மேற்சொன்ன இடங்களில் கடும் சோதனைக்குள்ளாகின்றனர். பொதுவாகவே ஹராமான விருப்பத்திற்குரியவற்றில் சோதனைகள் இருக்கின்றன.

அதாவது மஹ்ரமல்லாத ஆண், பெண் இருபாலாரும் கலப்பது போன்றன இதனைச் சேர்ந்ததாகும்.

கல்லெறியும் இடத்தில் ஆண்களுக்கு வேறான இடம், பெண்களுக்கு வேறான இடமென்றோ, அல்லது தவாபையும், கல்லெறிவதையும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரு நாள் விட்டு ஒருநாள் வைத்துக்கொள்வதற்கோ, அல்லது இவ்விடங்களில் ஆண்களின் நெரிசல்கள் அதிகமாகக் காணப்படுவதால் பெண்களுக்கு அவ்விரண்டையும் செய்ய வேண்டியதில்லை என்று சலுகை வழங்கவோ முடியுமாக இருந்தும் கூட ஷரீஅத் அவற்றை தற்போது நடைமுறையிலுள்ளதன் பிரகாரமே செய்ய வலியுறுத்தியுள்ளது. சிலவேளை அந்த நெரிசல்கள் ஆண்கள், பெண்களோடு முண்டியடிக்கச் செய்து விடுகிறது. இவ்வாறாக அமைவது பெரும் சோதனையாகும். உங்களுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவன் அல்லாஹ்வா? அல்லது பெண்களா? என்பதே அந்தச் சோதனையாகும்.

எனவே தன் உள்ளத்தை அல்லாஹ்வின் அன்பிலேயே ஈடுபடுத்திய ஓர் உண்மை முஃமின் கடும் நெரிசல்களுக்கு மத்தியில், மனிதர்களில் எவரேனும் கண்காணிக்காத இடத்தில் மிகவும் பேணுதலாக, எச்சரிக்கையாக, தன்னால் முடியுமான அளவு பயந்து நடப்பான். தனக்கு மிகவும் விருப்பத்திற்குரியவன் அல்லாஹ்வன்றி வேறொருவரும் இல்லை என்பதற்காக அன்றி வேறெப்பொருளுக்காக வேண்டியும் அவன் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. விசேடமாக நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அன்னாரின் மகன் இஸ்மாயிலுடன் கல்லெறியும் இடத்தில்

சோதிக்கப்பட்டேயன்றி அல்லாஹ்வின் நெருங்கிய தோழ்மை வழங்கப்படவில்லை. நீண்ட காலமாக பிள்ளைப் பாக்கியம் அற்றிருந்து சோதிக்கப்பட்டு பிள்ளை கிடைத்த பின்பு அதனையும், தாயையும் எந்தப் பயிர்பச்சையுமற்ற பாலையில் விட்டுவிட்டு ஷாம் பகுதிக்குச் செல்லுமாறு கட்டளையிடப்பட்டு சோதிக்கப்பட்டார்கள். பின்னரும் சோதனைகள் கடினமாக்கப்பட்டன. அது மாத்திரமின்றி தம் குடும்பத்தாரிடம் மீளச் செல்லுமாறு கட்டளையிடப்பட்டது. தன் குழந்தையை கண்ணுற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கும் போது அதனை அறுத்துப் பலியிடுமாறு கட்டளையிடப்பட்டு சோதிக்கப்பட்டார்கள். அக்கட்டளையை நிறைவேற்ற கல்லெறியும் இடத்தை வந்தடைந்த போது ஷைத்தான் மூன்று முறை வந்து அக்கட்டளையை நிறைவேற்றாது தடுத்து, ஊசலாட்டம் செய்தான். அங்கு நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவனைக் கல்லெறிந்து எதிர்த்து நின்றதே அவனுக்கு பதிலாக அமைந்ததே அன்றி வேறில்லை. விருப்பத்திற்குரிய அனைத்தை விடவும் அல்லாஹ்வே மிகப்பெரியவன்.

அல்லாஹு அக்பர்.... அல்லாஹு அக்பர்....

**வினா:**

மக்கா ஏன் பயிர்பச்சைகளற்ற பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது?

ஹஜ் என்னும் வணக்கம் பயிர்பச்சைகளும், பசுமையும் நிறைந்த, அருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் ஓரிடத்தில் தான் நிறைவேற்றப்பட வேண்டுமென்றிருப்பின் சிலவேளை ஹஜ்ஜு

செய்வோரின் எண்ணங்கள் மாறலாம். அல்லாஹ்வே மிக்க அறிந்தவன். ஹஜ்ஜின் மூலம் கலப்பற்ற வணக்கத்தை நாடுவாரா? அல்லது பசுந்தரைகளையும், அருவிகளையும் இயற்கை காட்சிகளையும் நாடுவாரா?..

அங்கு மற்றுமொரு தத்துவமும் உண்டு. -அல்லாஹ்வே மிக்க அறிந்தவன்-. அதாவது மக்காவுக்கு மக்கள் வந்து திரள்வதும், அது பசுமை நிறைந்த அருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் இடமாகவும் – இவ்விரண்டு தனித்துவங்களையும் பெற்றிருப்பின்- மனிதர்கள் அங்கே இடம்பிடித்து இருந்து கொண்டு, மற்றவர்களுக்கு அங்கு வரும் சந்தர்ப்பத்தைக் கொடுக்க மாட்டார்கள்.

என்றாலும் அல்லாஹ்வின் பேரருளினால் உள்ளங்கள் மக்காவை நாடி வருகின்றன. பிறகு அங்கே பயிர் பச்சைகளற்ற பள்ளத்தாக்கைக் காண்கின்றன. தொடரான கஷ்டங்களோடு இபாதத்தை செய்து முடித்து பிரயாணமாகின்றன. மற்றோருக்கு இடமளிக்கின்றன.

இறுதியாக உண்மையான அன்பை உறுதிப்படுத்துவது பற்றி பின்வருமாறு கூறுகிறோம். நிச்சயமாக அல்லாஹ் எந்தவொரு அடியார் உள்ளத்திலும் அவனுக்குச் சமமாக வேறொருவருடைய அன்பு இருப்பதை அங்கீகரிப்பதில்லை. மாறாக அடியாரது அன்பு அடியாரைப் படைத்தவன் மீது அதிகரிக்க வேண்டுமென்றே விரும்புகிறான். இதுவே அன்பில் உள்ள ஏகத்துவமாகும். இம்மாபெரிய நோக்கத்தை அடைந்துவிட்டால் அது உறுதியாவதற்கு துஆ செய்துகொள்ள வேண்டும். அதற்குத் தடையாக இருப்பவைகள் நீங்கவேண்டுமெனவும் துஆக் கேட்க

வேண்டும். இதற்கு உனக்கு விடையளிக்கப்படுமாயின் உனக்கு நற்சோபனம் உண்டாகட்டும்.

## இரண்டாவது நோக்கம்

## கண்ணியப்படுத்தல் அல்லாஹ்வுக்கு மாத்திரம் என்பதை உறுதிப்படுத்தல்

அல்லாஹ் கூறுகிறான், “இதுதான் (இறைவன் வகுத்ததாகும்,) எவர் அல்லாஹ்வின் சின்னங்களை

மேன்மைப்படுத்துகிறாரோ நிச்சயமாக அது உள்ளச்சத்தால் (ஏற்பட்டது) ஆகும்." (அல்குர்ஆன் 22:32).

அல்லாஹ்வின் கண்ணியத்தை எடுத்துக் காண்பிக்கக் கூடியதாகவும், அடியானின் இயலாமையை எடுத்துக் காட்டக் கூடியதாகவும் உள்ள அனைத்தும் அல்லாஹ்வின் சின்னங்களாகும். அது மிகத்தெளிவாக முஸ்தலிபா பூமியில் வெளிப்படுகின்றது. எவனது கண்ணியத்துக்கு அடியாரின் தலை சாய்ந்ததோ அந்த இறைவன் தூய்மையானவன்.

மினா, அரபா ஆகிய இடங்களில் ஹஜ்ஜாஜிகள் நிற்பதனையும், முஸ்தலிபாவில் நிற்பதனையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர் மிகவும் நுணுக்கமான வேறுபாட்டை அவதானிக்கலாம். அதாவது ஹஜ்ஜாஜிகள் மினா, அரபா முதலிய இடங்களில் ஒன்று கூடும் போது, அவர்களில் காணப்படும் ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் அவர்களின் உணவு, தங்குமிடம், வாகனம் என்பவற்றில் தெளிவாகக் காணக்கிடைக்கின்றது. மினாவிலும், அரபாவிலும் ஏழைகள் பாதையோரமாக தரித்திருப்பதையும், வசதிபடைத்தோர் பார்ப்போர் கண்களுக்குப் தென்படும் வண்ணம் தம் கூடாரங்களில் தம் பொருள் வாகனம் என்பவற்றோடு இருப்பதையும் தெளிவாகவே காணலாம்.

எதுவரையெனில் ஹாஜிகள் சிலவேளை படைத்தவனின் செல்வத்தை விட்டும் படைப் பினங்களின் செல்வச் செழிப்புகளையும், படைத்தவனின் மகத்துவத்தை விட்டும் படைப்பினங்களின் கண்ணியங்களையும் பார்க்க ஆரம்பித்துவிடுகின்றனர். சில உள்ளங்கள் அந்நேரம் மகத்துவம் பொருந்தியவனையே மறந்து நிற்கும்.

இங்கே முஸ்தலிபாவிற்கென்று சில சட்டங்கள் உள்ளன. அதன் மூலம் ஹாஜிகள் மத்தியில் காணப்படும் செல்வநிலை, கௌரவம் என்பவற்றை அது குறைத்து, எந்தவொரு கண்ணியமோ, கௌரவமோ, செல்வமோ அல்லாஹ்வினது மகத்துவத்துக்கும், செல்வத்துக்கும் இணையாக நிற்காது என்பதை எடுத்துக்காட்ட வழிவகுக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான், “மனிதர்களே! அல்லாஹ்வின் உதவி (எப்பொழுதும்) தேவைப்பட்டவர்களாக இருப்பவர்கள் நீங்கள்; ஆனால் அல்லாஹ் எவரிடமும் தேவைப்படாதவன்; புகழுக்குரியவன்.” (அல்குர்ஆன் 35:15). முஸ்தலிபாவுக்குரிய சட்டங்களை நீ சிந்தித்தால் ஹஜ்ஜாஜிகள் மத்தியில் காணப்படும் கௌரவம், செல்வம் என்ற வெளித் தோற்றங்களுக்கிடையில் மாற்றம் ஏற்படும் வண்ணம் முஸ்தலிபாவின் சட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளதைக் காண்பாய்.

இரவிலே அங்கு தங்குவதற்குக் கூடாரங்கள் தேவையில்லை. அவர்களது தோற்றத்தில் என்ன வேறுபாடுகள் இருந்த போதிலும் அங்கு தங்கும் சிலமணி நேரமும் எவ்வித அலங்கார ஆடைகளுமின்றி அவற்றைக் களைந்தவர்களாகவே தங்குகின்றனர். அந்நேரம் அவர்களது பொருட்களோ, பைகளோ அவர்களுக்குத் தேவைப்படுவதில்லை. மேலும் அவர்கள் முஸ்தலிபா பூமியில் ஏழைகளின் நித்திரையாக வெறுந்தரையிலேயே படுத்துறங்குவர். சில வேளை ஏழைகளின் உணவையே சாப்பிடுவர்.

அதைவிடவும் மலசல கூடங்களுக்காக ஏழை, பணக்காரன், கறுப்பன், வெள்ளையன் என்ற வேறுபாடின்றி அணிவகுத்து நிற்பதைக் காணலாம். செல்வ நிலைத்

தோற்றத்திலிருந்து தூரப்பட்டு இயலாமை, வறுமை என்பவற்றை அணிகலனாகக் கொண்டு தோற்றமளிப்பதைக் காணலாம். இக்காட்சியை முஸ்தலிபாவில் கூடும் அனைவரும் காண்கின்றனர். மகத்துவம் பொருந்தியவன் அல்லாஹ் அன்றி வேறெவரும் இல்லை.

## மூன்றாவது நோக்கம்:

## அல்லாஹ்வின்பாலுள்ள ஆதரவை உறுதிப்படுத்தல்

அல்லாஹ் கூறுகிறான், “(அல்லாஹ்வையன்றி) இவர்கள் யாரை பிரார்த்திக்கின்றார்களோ அவர்கள், ஏன் அவர்களில் மிகவும் (இறைவனுக்கு) நெருக்கமானவர்கள் கூட தங்கள் இறைவன்பால் (கொண்டு செல்ல) நற்கருமங்களை செய்து கொண்டும் அவனது அருளை எதிர்பார்த்தும் அவனது தண்டனைக்கு அஞ்சியுமே இருக்கின்றனர். நிச்சயமாக உமது இறைவனின் தண்டனை அச்சப்படத் தக்கதாகவே உள்ளது.” (அல்குர்ஆன் 17:57).

ஹஜ்ஜின் கடமைகள் விதிக்கப்பட்ட அமைப்பானது தங்குமிடங்களில், கூடாரங்களில் அல்லாஹ்வை எதிர்பார்ப்போர், அடியாரை எதிர்ப்பார்ப்போர், ஏழைகள், வசதி படைத்தோர், சமூகப்பிரதாணிகள், சாதாரணமகன், கட்டளையிடுவோர், இடப்படுவோர் என பல தரப்பட்டோர் ஒன்றரக்கலந்து, நெருக்கமாக இருக்கச் செய்கிறது. பொது வாழ்வில் இவ்வாறு காணப்படுவது அரிதாகும். இந்த

நெருக்கம் அரபா, முஸ்தலிபா ஆகிய இடங்களில் வெளிப்படையாகத் தெரியும்.

இவ்விரு இடங்களிலும் ஹஜ்ஜாஜிகளது காட்சியைப் பார்த்து சிந்திக்கும் எவரும் அவர்கள் எல்லோரும் அடியாரை விட்டு வேறொருவன் பால் ஆதரவோடு ஈடுபட்டிருப்பதைக் காணலாம். தன் பொக்கிஷம் குறைவுறாத அருட்கொடைகள் மட்டிடப்பட முடியாதவனின் பால் ஆதரவோடு நோக்கி நிற்பதைக் காணலாம். அவனை பூமியிலோ, வானிலோ உள்ள எப்பொருளும் இயலாமற் செய்யமாட்டாது.

ஏழை, செல்வந்தன், நோயாளி, வைத்தியன் என்ற எந்த வேறுபாடுமின்றி தனது பணிவையும், இயலாமையையும் வெளிப்படுத்தி, இருகரமேந்திக் கேட்பதானது சகலருமே ஏக அல்லாஹ்விடம் மாத்திரமே ஆதரவு வைக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதாயிருக்கிறது.

இது உலகைப் படைத்துப் போசிக்கும் இறைவனிடம் வைக்கும் எதிர்ப்பார்ப்பைத் தூய்மைப்படுத்துவதைச் சேர்ந்ததாகும்.

## நான்காவது நோக்கம்:

## அல்லாஹ் பற்றிய பயத்தை உறுதிப்படுத்துவது

அல்லாஹ் கூறுகிறான், “இன்னும் எவர்கள் தம் இறைவனிடம் தாங்கள் திரும்பிச் செல்ல வேண்டியவர்கள் என்று அஞ்சும் நெஞ்சத்தினராய் (நாம் கொடுத்ததிலிருந்து) தங்களால் இயன்ற மட்டும் (அல்லாஹ்வின் பாதையில்) கொடுக்கிறார்களோ

அவர்களும்- இ(த்தகைய)வர்கள் தாம் நன்மைகளின் பக்கம் விரைகின்றனர்; இன்னும் அவற்றை (நிறைவேற்றி வைப்பதில்) முந்துபவர்களாகவும் இருப்பார்கள்." (23:60-61).

ஹஜ்ஜு பற்றி கூறப்பட்டவைகளையும், நடைமுறையையும், வரலாற்றையும் ஊன்றிக் கவனிப்போர் அங்கே ஹஜ்ஜு எனும் அமலுக்கும், அச்சத்தின் வெளிப்பாட்டுக்கும் இணைபிரியாத் தொடர்பு இருப்பதைக் காண்பார். அது அல்குர்ஆன், ஸுன்னா, நடைமுறை என்பவற்றை அவதானிப்பதன் மூலம் தெளிவாகின்றன.

**முதலாவது: அல்குர்ஆன்,**

சகோதர ஹாஜியே! ஸூரதுல் ஹஜ்ஜை ஓதிவிட்டு சிந்தித்துப் பார்!!! மிகவும் பயங்கரமான ஒரு காட்சியோடு அந்த அத்தியாயம் ஆரம்பிக்கின்றது. அதாவது, "மனிதர்களே! நீங்கள் உங்களுடைய இறைவனை பயந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக (கியாமத்து நாளாகிய) அவ்வேளையின் அதிர்ச்சி, மகத்தான பெரும் நிகழ்ச்சியாகும். அந்நாளில், பாலூட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தாயும் தான் ஊட்டும் குழந்தையை மறந்து விடுவதையும், ஒவ்வொரு கர்ப்பிணியும் தன் சுமையை ஈன்று விடுவதையும் நீங்கள் காண்பீர்கள்; மேலும், மனிதர்களை மதி மயங்கியவர்களாக இருக்க காண்பீர்; எனினும் (அது மதுவினால் ஏற்பட்ட) மதி மயக்கமல்ல; ஆனால் அல்லாஹ்வின் வேதனை மிகக் கடுமையானதாகும்." (அல்குர்ஆன் 24:1-2).

ஹஜ்ஜின் நோக்கங்கள் பற்றி பேசும் ஸூறாவின் ஆரம்பம் இதுவாகும்.

மனிதா! ஹஜ்ஜுக்கும், அச்சம் கொள்வதற்குமிடையில் ஏதும் சம்பந்தமுண்டா?

**ஸுன்னாவிலே** அவதானித்துப் பார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்வதை ஜிஹாத் என்று குறிப்பிட்டார்கள் என்பதைக் காண்பீர். அன்னார் பெண்களுக்குப் பின்வருமாறு கூறினார்கள். யுத்தமில்லாத ஜிஹாத் உங்கள் மீது கடமையாகும். அது ஹஜ்ஜும், உம்ராவும் என்றார்கள். (ஆதாரம்: முஸ்னத் அஹ்மத், இப்னுமாஜா)

ஜிஹாத் என்பது பயத்தின் தோழனன்றி வேறென்ன?!!

பின்னர் ஹுதைபியா உடன்படிக்கை நடந்த வருடம் மக்கா சென்றடைவதற்காக அல்லாஹ்வின் தூதர் மேற்கொண்ட முயற்சியோடு பயம் எப்படி தொடர்பானது என்று சிந்தித்துப்பார்.

குறைஷிகள் முஸ்லிம்களை உம்ராச் செய்ய விடாது தடுத்தனர். மனிதர்களுக்கு யுத்தத்துக்கு வருமாறு அறைகூவினர். மு ஃமின்களும் மரத்துக்கு அடியில் யுத்தத்துக்கான சத்தியப் பிரமாணம் செய்தனர். பின்னர் அடுத்த வருடம் உம்ரா செய்வதன் பேரில் சமாதானம் ஏற்பட்டது. குறைஷிகள் மோசடி செய்யலாம் எனப் பயந்த முஸ்லிம்கள் இஹ்ராமோடு வாலேந்தி வர அனுமதிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையை இட்டுக் கொண்டனர். அது பயத்தோடு கூடிய உம்ராவாகியது.

**நடைமுறையைப் பார்த்தால்**, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலந்தொட்டு பல நூற்றாண்டுகள் தாண்டியும் ஹஜ் பயத்தோடன்றி இல்லையென்பதை ஹஜ்ஜு பற்றி சிந்திப்போர் காண்பர்.

குறைஷிகளின் பயம் நீங்கிய பின்பு மக்கா செல்லும் பாதை நெடுகிலும் பதின்மூன்று நூற்றாண்டுகளாக வழிபறிக்காரர் பரந்து காணப்பட்டனர். மக்கா செல்வோர் காணாமற் போனவர் போன்றும், திரும்பி வருவோர் புதிய ஒரு பிறவியாகவுமே காணப்பட்டனர்.

வழிப்பறிக்காரரின் தொல்லையிலிருந்து நீங்கி பயமும் நீங்கும்போது கூடாரங்களில் நெருப்பெடுக்கும் பயம் ஆரம்பித்து விட்டது. அது ஹஜ்ஜோடு சேர்ந்த ஒன்றாகவே நீண்டகாலம் இருந்து வந்தது. நெருப்பணைக்கும் விடயத்தில் மக்கள் முயற்சியெடுத்தனர்.

பின்னர் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களின் பயம் ஆரம்பித்தது. தொடர்ந்து குண்டு வெடித்தல், கல் வீச்சி, வாளேந்துதல், பறவைக்காய்ச்சல் போன்ற பல்வேறு வகைப் பயங்கள் ஆரம்பமாயின. இன்றுவரை ஏதேனும் ஒரு பயத்தின் வாயிலை மூடிவிட முயன்றால் மற்றொரு பயத்தின் வாயில் திறப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

எந்தளவுக்கென்றால் ஹஜ்ஜுக்கென தயாராகிவிட்ட ஒருவர் தான் பிரயாணத்துக்கு எண்ணம் கொண்ட நேரம் முதல் தன் குடும்பத்தவரிடம் மீண்டு வரும்வரை ஒரு வகை அச்ச உணர்வோடிருப்பதைக் காணலாம். ஹஜ்ஜுக்கும், பயத்துக்குமிடையே ஒரு வகை நெருக்கமிருப்பது ஏன்? இதன் தாத்பரியம் என்ன?

அதன் நோக்கம் நாவாலும், உள்ளத்தாலும், உறுப்புக்களாலும் கொண்ட விசுவாசத்தை அச்சத்தோடு செய்யும் வணக்கத்தின் மூலம் உயர்வடைவதாக

இருக்கலாம். அல்லாஹ் மிக்க அறிந்தவன். அது எவ்வாறு இருக்கலாம்!!

நீ ஒரு ஹாஜியிடம் கடந்த காலங்களில் ஹஜ்ஜின் போது நிகழ்ந்த பயங்கர நிகழ்வுகளைக் கேள்வியுற்றீரா? நிறைய பேர் இறந்தார்களே! இவ்வருடமும் ஏதும் பயங்கரங்கள் நிகழலாம் எனக் கேள்விப்படவில்லையா? என்றெல்லாம் கேட்டால் ஆம் என்றே பதில் கூறுவார்.

இவ்வளவு பயங்கரங்கள் இருந்தும் ஹஜ்ஜுக்கு வரத்தூண்டியது எது என்று கேட்டால் அவர் பின்வருமாறு கூறுவார், “வசதியிருந்தும் ஹஜ்ஜு செய்யாமலிருப்பவனுக்குரிய அல்லாஹ்வின் தண்டனையைப் பற்றிய பயமே மற்ற எல்லாப் பயங்களை விடவும் பெரியதாக உள்ளது” என்பார்.

ஹஜ்ஜின் நோக்கங்களில் இதுவும் ஒன்று. அதுதான் உலகைப் படைத்துப் போசிக்கும் இறைவனாகிய அல்லாஹ் பற்றிய அச்சத்தை ஏகத்துவப்படுத்தி, உறுதிசெய்து கொள்வதாகும்.

## ஐந்தாவது நோக்கம்

## அல்லாஹ்வின் மீது பாரம்சாட்டுவதை உறுதிப்படுத்தல்

அல்லாஹ் கூறுகிறான், “மூஸா (தம் சமூகத்தவரிடம்): “என் சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்பவர்களாக இருந்து, நீங்கள் மெய்யாகவே அவனை முற்றிலும் வழிபடுபவர்களாகவே (முஸ்லிம்களாக) இருந்தால்

அவனையே பூரணமாக நம்பி (உங்கள் காரியங்களை ஒப்படைத்து) விடுங்கள்" என்று கூறினார்.

(அதற்கு) அவர்கள்: "நாங்கள் அல்லாஹ்வையே பூரணமாக நம்பி (அவனிடமே எங்கள் காரியங்களை ஒப்படைத்து)க் கொண்டோம் (என்று கூறி) எங்கள் இறைவனே! அநியாயம் செய்யும் மக்களின் சோதனைக்கு எங்களை ஆளாக்கிவிடாதே!" என்று பிரார்த்தித்தார்கள்." (10:84-85).

சகோதர ஹாஜியே! நீங்கள் உங்களூரில் உறவினர் மத்தியில் பாதுகாப்பான வீட்டில் இருக்கையில் வங்கியில் நீங்கள் வைப்புச்செய்துள்ள பணம் அல்லது உங்களது வாகனம், அவற்றின் எதிர்காலம் பற்றி நிம்மதி காண்பீர்கள். நீங்கள் சகலதையும் அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டிவிட்டேன் என்று மிகவும் எளிதாகக் கூறிவிடுவீர்கள். என்றாலும் உண்மை என்ன என்று யாரும் அறியார். உண்மையில் நீங்கள் அல்லாஹ் மீது சாட்டியுள்ளீர்களா? அல்லது இந்தக் காரணிகள் மீது சாட்டியுள்ளீர்களா?

எனினும் புனித ஹஜ்ஜுக்குச் செல்பவர் அல்லாஹ் மீது மாத்திரமே சகலதையும் சாட்டுகிறான் என்பதற்கு ஒரு தெளிவான ஆதாரத்தை முன்வைக்கிறது.

மினா என்ற பள்ளத்தாக்கையும், அங்கு கூடாரங்களிலும், பாதைகளிலும் மக்களோடு இருப்பதையும் கண்டு, நீங்கள் இவ்வாறு இருக்கையில் பல்வேறு வித அனர்த்தங்கள் ஏற்படலாம் தானே என்று அவர்களிடம் கேட்டால், - அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் -

கடும் வெள்ளம் வந்தால் இந்தக் கூடாரத்தையும் அதிலுள்ளோருடன் சேர்த்து அடித்துச் செல்லாதா?

கடுமையான இடியும், மின்னலும் வீழ்ந்தால் இந்தக் கூடாரங்கள் பாதுகாப்பளிக்குமா?

தொற்று நோய் பரவ அதனை கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியுமா?

குழப்பவாதிகளிற் சிலர் திட்டமிட்ட பாதைகளில் நின்று ஹாஜிகளுக்கு ஏதும் தீங்கிழைக்க நாடி, அதிலிருந்து அவர்களைப் பாதுகாக்க ஏதும் உண்டா?

ஹஜ்ஜுக்கு வந்து செல்லும் பிரயாணத்தின் போது விமானம் வீழ்தல், கப்பல் மூழ்குதல், வாகன விபத்துக்கள் போன்ற அனர்த்தங்கள், விபத்துக்கள் நிகழாதா? போன்ற பல கேள்விகளை நீ ஹாஜியிடம் கேட்டால் ஆம் இவையெல்லாம் நிகழலாம். எனினும் மனித வளம் எவ்வளவு நிறைய இருந்த போதிலும் குறித்த அனர்த்தங்கள் நிகழ வேண்டுமென அல்லாஹ் நாடினால் எந்த ஒன்றும் ஈடாகாது என்பதாகவே அவருடைய பதிலிருக்கும்.

இரண்டாவது கேள்வியாக, அப்படியென்றால் நீங்கள் யாரை நம்பியிருக்கிறீர்கள்? யார் மீது தவக்குல் வைத்திருக்கிறீர்கள்? என்று ஹாஜிகளிடம் கேட்டால் நாங்கள் அல்லாஹ் மீதே தவக்குல் வைத்துள்ளோம் என்ற பதிலையே எல்லா ஹாஜிகளிடமும் பெற்றுக்கொள்வீர்கள்.

அல்லாஹ் மீது பாரம்சாட்டுவதன் உண்மையை ஏகத்துவப்படுத்துவது சொல்லாலும், செயலாலும் அவன் மீது சாட்டுவதன் உண்மை இதுவாகத்தான் இருக்கலாம்.

## ஆறாவது நோக்கம்

## அல்லாஹ்வின்பால் மீளுவதை உறுதிப்படுத்தல்

அல்லாஹ் கூறுகிறான், “ஆகவே (மனிதர்களே!) உங்களுக்கு வேதனை வரும் முன்னரே நீங்கள், உங்கள் இறைவன் பால் திரும்பி, அவனுக்கே முற்றிலும் வழிபடுங்கள்; (வேதனை வந்துவிட்டால்) பின்பு நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள்.” (அல்குர்ஆன் 39:54).

ஹஜ்ஜுக்குப் போய்வர வசதியும், சக்தியும் என்ற நிபந்தனை இருப்பதனால் ஹஜ்ஜுக்குச் செல்வோரில் அதிகம் பேர் உடலாலும், பொருளாலும் சக்தி பெற்றவர்களாக இருந்து வருகின்றனர்.

இந்த இரண்டு சக்திகளும் ஹஜ்ஜுக்குச் செல்வோரிடம் நிறப்பமாக இருப்பது அவர்களை வேறு தேவைகளில்லாமல் ஆக்குகின்ற போதும், அரபா, தவாப் செய்யும் இடம், ஸபா, மர்வா முதலிய இடங்களில் ஹாஜிகள் தம் குற்றங்களை ஏற்றுக்கொண்ட நிலையில் இயலாமையை வெளிப்படுத்திக்கொண்டு பயந்த நிலையில் நின்றிருப்பதைக் காண்பாய். தனக்கு அல்லாஹ்வின் வல்லமையன்றி எந்தச் சக்தியும் கிடையாது என்று நீங்கி தன் கவனயீனத்துக்காகக் கவலைப்பட்டவனாகக் காண்பாய். மேலும் தன் இறைவனின் மன்னிப்பை ஆதரவு வைத்தவனாக தன்

பாவங்களை அவன் மன்னிக்க வேண்டுமென்றும் தன்னால் நிகழ்ந்த பாவங்கள் மறைக்கப்பட வேண்டும் என்ற ஆதரவோடும் நிற்பதைக் காணலாம்.

இதுவே அல்லாஹ்வின்பால் மீளுதல் என்பதன் உண்மை நிலையாகும்.

இங்கு இன்னோரு வினா தோன்றுகின்றது.

இந்த உள்ளங்களெல்லாம் யார் பக்கம் திரும்பியுள்ளது?

எவரேனும் பலமுள்ளவர்களின் கட்டளையோ அல்லது செல்வந்தர்களின் வாக்குறுதிகளோ வந்ததா? அவர்களுக்குப் பயந்து அவர்களிடம் உள்ளதை ஈட்டிக்கொள்ள இவ்வாறு கண்கள் கண்ணீரைக் கொட்டுமா?

ஒரு போதும் இல்லை.

ஆனால்.........

உலகைப் படைத்துப் போசிக்கும் இறைவனிடம் மீளுதல் என்பதை தூய்மையோடு ஏகத்துவப் படுத்துவதாக இது இருக்கலாம்.

# ஏழாவது நோக்கம்
# அல்லாஹ்வுக்கென்று அடங்கி நடப்பதை உறுதிகொள்ளல்

அல்லாஹ் கூறுகிறான், “நிச்சயமாக எவர்கள் நம்பிக்கைக் கொண்டு நற்கருமங்கள் செய்து இன்னும் தங்கள் இறைவனுக்கு முற்றிலும் அடிபணிகின்றார்களோ அவர்களே சுவனபதிக்குரியவர்கள்; அங்கு அவர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள்.” (11:23).

அடிபணிதல் என்பது அல்லாஹ்விடம் பொதுவாக ஒப்புவித்தலைக் குறிக்கிறது. அல்லாஹ் தன் எஜமான் என்பதையும், அவனது மகத்துவத்தையும் விளங்கி அடியான் தன் அடிமைத்துவத்தையும், இறைவன் பால் தனது தேவைகளையும் ஏற்றுக்கொள்வதைக் குறிக்கின்றது.

மேற்படி அடிபணிதல் என்னும் சொல் அல்குர்ஆனில் மூன்று இடங்களில் கூறப்பட்டுள்ளன. அதாவது மேலே கூறப்பட்ட ஒன்றோடு இன்னும் இரண்டு இடங்களாகும். அவ்விரண்டும் ஸூரதுல் ஹஜ்ஜில் கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகிறான், “ஆகவே உங்கள் நாயன் ஒரே நாயன்தான்; எனவே அவ(ன் ஒருவ)னுக்கே நீங்கள் முற்றிலும் வழிப்படுங்கள்; (நபியே!) உள்ளச்சம் உடையவர்களுக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக!” (அல்குர்ஆன் 22:34).

அல்லாஹ் கூறுகிறான், “(ஆனால்) எவருக்கு கல்வி ஞானம் அளிக்கப்பட்டிருகின்றதோ அவர்கள், நிச்சயமாக இ(வ் வேதமான)து உம்முடைய இறைவனிடமிருந்துள்ள

உண்மை என்று அறிந்து அதன் மீது ஈமான் கொள்வதற்காகவும் (அவ்வாறு செய்தால், அதன் பயனாக) அவர்களுடைய இருதயங்கள் அவன் முன் முற்றிலும் வழிப்பட்டுப் பணிகின்றன; மேலும்: திடனாக அல்லாஹ் ஈமான் கொண்டவர்களை நேரான வழியில் செலுத்துபவனாக இருக்கின்றான்.” (அல்குர்ஆன் 22:54).

மூன்று இடங்களில் இரண்டை ஸூரதுல் ஹஜ்ஜிலேயே ஏன் பிரஸ்தாபிக்க வேண்டும்? என்றொரு கேள்வி எழுகிறது. அதன் உள்நோக்கம் அல்லாஹ்வே மிக்க அறிந்தவன். சில வேளை அடியார்கள் முற்றிலும் அடிபணிந்து சரணடைந்து நிற்கும் நிலைமைகள் அதிகமாக வெளிப்படும் தருணம் ஹஜ்ஜின்போதே ஏற்படுகின்றன என்பதினாலாகும்.

நீர் அதிகமான ஹாஜிகளை அணுகி அரபா செல்வது, கல்லெறிவது, முஸ்தலிபாவில் இரவைக் கழிப்பது போன்ற விடயங்களை மிகவும் நுணுக்கமான முறையில் ஆர்வத்தோடு ஏன் செய்கிறீர்கள்? என்று கேட்டால் ஏன் இவை விதிக்கப்பட்டுள்ளன? இதன் நோக்கமென்ன? போன்ற கேள்வியைக் கேட்டால் அல்லாஹ்வை வணங்குவதன்றி வேறு நோக்கமில்லை என்றே பதிலளிப்பார்கள்.

இது அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணிவதும், அவனிடமே சரணடைவதுமாகும். அதாவது ஒரு அடியான் தன் மீது விதியான கடமைகளை மனநிறைவோடு அந்த அமல்கள் பற்றிய தத்துவங்கள், தாத்பரியங்கள் பற்றிய எந்த விரிவும், விபரமும் பாராமல் அல்லாஹ்வுக்கென்றே நிறைவேற்றுவதாகும். தான் நிறைவேற்றும் அமல் தன்னை அல்லாஹ்வின் திருப்தியின் பால் கொண்டு சேர்க்கும் என்ற நம்பிக்கையோடு நிறைவேற்றுவதாகும்.

சில வேளை ஒரு மனிதன் கட்டளையிட்டால் ஏனென்று கேட்பான். அல்லது இப்படி நல்லது என்பான். அல்லது எனக்குப் பிடிக்கவில்லை என்பான். அல்லாஹ்வின் கட்டளைகளில் அப்படிப் பார்க்க மாட்டான். ஸுப்ஹானல்லாஹ்.

அனைத்து உள்ளங்களும் எவனுக்கு அடி பணிகின்றனவோ அந்த இறைவன் தூய்மையானவன்.

ஹஜருல் அஸ்வதை முத்தமிடச் சென்ற உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எவ்வளவு அழகாக தம் அடிபணிதலை வெளிப்படுத்திக் கூறினார்கள். “அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நிச்சயமாக நீ ஒரு வெறுங்கல். உன்னால் எந்த ஒரு பயனையோ, பாதிப்பையோ தரமுடியாது என்பதை நானறிவேன் நபியவர்கள் உன்னை முத்தமிடுவதை நான் கண்டிருக்காவிட்டால் நான் முத்தமிட்டிருக்கமாட்டேன்” என்று கூறினார்கள். (ஸஹீஹுல் புஹாரி 1605).

ஹஜ்ஜுக்கு வருவோரிற் சிலர் தம் ஊரிலே செல்வச் செருக்கோடு ஏழை எளியோரை ஏறிட்டும் பார்க்காது ஏன் பொதுமக்களைக் கூட பார்க்காது சகல வசதிகளோடும் இன்பமாக தம் மாளிகைகளில் வாழ்வர்.

எனினும் ஹஜ்ஜுக்குச் செல்ல அழைக்கப்படும் போது வந்து ஏழை எளியோரோடு ஒன்றாகக் கலந்து, அவர்களது உணவையே சாப்பிட்டு, அவர்கள் போன்றே நித்திரை கொண்டு, தவாப், ஸஈ, கல்லெறிதல் போன்றவற்றை நிறைவேற்றும் போது துர்வாடைகளையும் நெருக்கடியையும் சகித்துக் கொள்வர்.

ஹஜ்ஜுக் கடமையின் தாத்பரியங்கள் பற்றிய எந்த விபரமும் தெரியாது, இதனை நிறைவேற்ற அவனைத் தூண்டியது எது? என உன்னையே நீ கேட்டுப்பார். மேலும் நல்ல வசதிகளையும், இன்ப சுகங்களையும் விட்டுவிட்டு ஏழை எளியோரோடு கலக்கச் செய்தது எது? எவரேனும் இவர்களை வற்புருத்தினார்களா?

விடை இல்லையென்றே இருக்கும். எனினும் பணிதலும், அடக்கமுமே அதன் காரணமாகும். இதுவே அல்லாஹ்வுக்கு அடங்கி நடப்பதை ஏகத்துவப்படுத்துவதாக ஆகலாம்.

## சங்கைமிகு மக்காவின் தனித்துவங்கள்

நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வாயிலாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான், ““எங்கள் இறைவனே! நிச்சயமாக நான் என் சந்ததியாரிலிருந்தும், சங்கையான உன் வீட்டின் (கஃபாவின்) அருகே, விவசாயமில்லாத (இப்)பள்ளத்தாக்கில், எங்கள் இறைவனே! - தொழுகையை அவர்கள் நிலை நிறுத்தாட்டுவதற்காகக் குடியேற்றியிருகின்றேன்; எனவே மக்களில் ஒரு தொகையினரின் இதயங்களை அவர்கள்பால் சாய்ந்திடச் செய்வாயாக! இன்னும் அவர்கள் நன்றி செலுத்தும் பொருட்டு கனிவர்க்கங்களிலிருந்து அவர்களுக்கு நீ ஆகாரமும் அளிப்பாயாக!”” (14:37).

மக்காவின் வரலாற்றையும், அதன் சிறப்புபற்றி வந்துள்ள ஆதாரங்களையும், அங்கு நிகழ்ந்த சம்பவங்களையும் ஊன்றிக்கவனிப்போர் நிச்சயமாக இப்பூமிக்கு அல்லாஹ் மற்றெந்தப் பூமிக்கும் இல்லாத

சிறப்புக்களை, தனித்துவங்களை வைத்துள்ளான் என்பதைக் கண்டுகொள்வர்.

மக்காவுக்கென்றே தனியான சட்டங்களை அல்லாஹ் வைத்துள்ளான். அது எந்தவொரு இடத்துக்கும் கிடையாது. அது சங்கையான பூமி. அங்கு வேட்டையாடுவது கூடாது. மரங்கள் வெட்டப்படலாகாது. அங்கு வீழ்ந்திருக்கும் பொருளை எடுக்கலாகாது. இதுபோன்ற பல சட்டங்கள் உள்ளன.

அதன் சிறப்புக்களைச் சேர்ந்தது தான் மனிதர்களை அப்பூமிக்கு வரச்செய்தது. நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க அங்குள்ள அளவுகளான முத்து, ஸாஉ போன்றவற்றையும் அபிவிருத்தியடையச் செய்துள்ளான்.

மேலும் அதன் சிறப்புக்களைச் சேர்ந்தது தான் அப்பூமியில் எவரும் அநியாயம் செய்தால், செய்ய நாடினால் கூட அல்லாஹ் மிகவும் கடினமான தண்டனையை அனுபவிக்கச் செய்வான். “மேலும் யார் அதிலே (மஸ்ஜிதுல் ஹறாமில்) அநியாயம் செய்வதன் மூலம் வரம்பு மீற விரும்புகிறானோ அவனுக்கும் நோவினை தரும் வேதனையிலிருந்து சுவைக்கும்படி நாம் செய்வோம்.” (22:25). இச்சிறப்புக்கள் நூல்களில் தாராளமாக உள்ளன.

எனினும் மக்கா விடயமாக அவதானிப்போர் -அது அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான பூமி- அதற்கென்று தனியான சிறப்புக்களை வைத்துள்ளான் என்பதைக் காணலாம். நிச்சயமாக அங்கே நேர்வழி, பயனுள்ள அறிவு, நற்கருமங்கள், ஞானம் போன்ற அடிப்படை அருட்கொடைகளை அல்லாஹ் வழங்குகிறான்.

விசுவாசம், நல்லன செய்தல், வீரமரணம் உண்மைத்தன்மை முதலானவற்றை மற்ற எந்த ஊரிலும் கொடுக்காத அளவு அதிகமாகவும், சீக்கிரமாகவும் வழங்குகிறான். இவ்வருட் கொடைகளையும், அந்தஸ்த்தையும் கேட்போருக்கு ஏனைய இடங்களை விடவும் விடையளிப்பதில் மும்முரமாய் இருக்கிறான். இவ்வருட்கொடைகளை அல்லாஹ் இப்புவியெங்கும் கொடுக்கின்றான். எனினும் மக்காவிலோ அதிகமாகவும், அவசரமாகவும் கொடுக்கிறான்.

உதாரணமாக நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மக்காவுக்கு வெளியே இஸ்லாம், ஈமான், இஹ்ஸான், நுபுவ்வத், ரிஸாலத் ஆகியவற்றைக் கொடுத்தான். எனினும் அவன் இப்றாஹிமுக்கு தன்னுடைய நேசன் – கலீல்- என்ற உயரிய அந்தஸ்த்தைக் கொடுக்க மக்காவுக்கு அழைத்தான். அங்குதான் கடும் சோதனைகள் நிகழ்ந்தன. வழங்கப்பட்ட நன்கொடை மாபெரியதாக இருந்தது. அதுதான் நேசன் என்ற அந்த உயர் அந்தஸ்து.

இதோ நம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலே அன்னாரது உள்ளம் அடிப்படையான அருட்கொடைகள் மூலம் நிறப்பப் பட்டது. அது மாபெரிய சோதனைகளுக்குப் பிறகே நடந்து முடிந்தது. பின்னர் அன்னாருக்கு மக்காவில் வைத்தே அல்லாஹ்வின் நேசத்தை வழங்கி, அருள்பாலித்ததோடு, மதீனாவுக்கு ஹிஜ்ரத்தை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கினான்.

இவ்வாறு இப்பூமிக்கு அழைக்கப்படும் ஹாஜிக்கு இப்பூவுலகில் எங்கும் கிடைக்காத வண்ணம் அதிகமாகவும், அளவின்றிக் கொடுப்பதும், குறிப்பிட்ட

நாட்களில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வேறிடங்களில் பெற்றுக்கொள்ள முடியாத அருட்கொடைகளைப் பெற்றுக்கொள்வதும் ஹஜ்ஜின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கலாம்.

ஹஜ்ஜுக்கு வருவோர் மக்கா பூமிக்குரிய விசேடத்தைக் கவனத்திற்கொண்டால் சகலவித அருட்கொடைகளையும் கேட்டு, அதிகமாகப் பிரார்த்தித்துக் கொள்வான்.

சிலவேளை இந்தக் குறுகிய பிரயாணத்தின் போது அவனது வேண்டுதலை ஏற்று, அவனது அறிவு, ஞானம், நல்ல அமல்கள் முதலியவற்றை அதிகரிக்கச் செய்வான். அந்தஸ்தையும் உயர்த்துவான். முஸ்லிமாக வந்தவன் முஃமினாகத் திரும்புவான். அல்லது முஃமினாக வந்தவன் முஹ்ஸினாகவோ, அல்லது முஹ்ஸினாக வந்தவன் உண்மையாளனாகவோ திரும்புவான்.

அல்லாஹ் தனது அடிப்படையான அருட்கொடைகள் அடியார்களுக்குக் கொடுப்பதாயின் அவனை சோதிக்காமல் கொடுப்பதில்லை. எனவேதான் நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஈராக், ஷாம் பிரதேசங்களில் ஏற்பட்ட சோதனையை விட மக்காவிலே அதிகமாகக் காணப்பட்டது. முஹம்மத் ஸல்லல்லாஹு அவர்களுக்கு மதீனாவை விட மக்காச் சோதனை கூடுதலாக இருந்தது. மூலம் இரண்டு நபிமார்களும் “நேசர்” என்ற உயர்பதவியை அடையவே இவ்வாறு சோதிக்கப்பட்டார்கள். ஆதலால் தான் ஹாஜிகளுக்கு ஏற்படும் எல்லாவித சோதனைகளும் பின்னர் கிடைக்கவுள்ள மகத்தானதொரு கூலிக்காகவே இருக்கின்றன. அது அவர்கள் பொறுமையுடன் அல்லாஹ்வை அஞ்சி நடந்தால் மாத்திரமேயாகும்.

அல்லாஹ் கூறுகிறான், “எவரும்(மினாவிலிருந்து) இரண்டு நாட்களில் விரைந்துவிட்டால் அவர் மீது குற்றமில்லை; யார்(ஒரு நாள் அதிகமாக)தங்குகிறாரோ அவர் மீதும் குற்றமில்லை; (இது இறைவனை) அஞ்சிக் கொள்வோருக்காக (கூறப்படுகிறது); அல்லாஹ்வை நீங்கள் அஞ்சிக் கொள்ளுங்கள்; நீங்கள் நிச்சயமாக அவனிடத்திலே ஒன்று சேர்க்கப்படுவீர்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.” (அல்குர்ஆன் 02:203).

இரண்டு தினங்களில் திரும்பி விடுவதை அல்லாஹ் இலகுவாக்கியுள்ளான். அதில் குற்றமில்லை என்றால் மூன்று தினங்களின் பின் புறப்படுவோர் பெரிய கூலியைப் பெற்றுக்கொள்வார் என்பது வெளிச்சமாகும்.

என்றாலும் அவ்வாறு பிற்படுத்துவோர் மீது அல்லாஹ் இறையச்சம் என்ற நிபந்தனையை விதிக்கிறான். ஏனெனில் அவன் தாமதாகும் போது பெரியகூலியைப் பெற்றுக்கொள்ள சோதனைகளும் அதிகமாகும். எனவே யார் தாமதிக்திறாரோ அவர் பல சோதனைகளுக்குப் பின் பெரியகூலியைப் பெற்றுக் கொள்வார்.

அல்லாஹ் கூறுகிறான், “உங்களில் (அல்லாஹ்வின் பாதையில் உறுதியாகப்) போர் புரிபவர்கள் யார் என்றும், (அக்காலை) பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள் யார் என்றும் அல்லாஹ் (பரிசோதித்து) அறியாமல் நீங்கள் சுவனபதியில் நுழைந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டு இருக்கின்றீர்களா?” (அல்குர்ஆன் 03:142).

# முடிவுரை

# ஹஜ்ஜின் பின்னர் என்ன?

சகோதர ஹாஜியே! ஹஜ்ஜின் நோக்கம் பற்றி இந்த சீக்கிரமான பயணத்தை முடித்த நாம் மீண்டும் நாம் பெற்ற படிப்பினைகளை சற்று மீட்டிப் பார்ப்பது பொருத்தமாகும்.

அல்லாஹ்வின் அருள்கொண்டு கூறுகிறேன்,

சற்று சிந்தித்துப் பாருங்கள் சகோதரரே! ஹஜ்ஜின் போது ஸஹாபாக்களுக்கு வேட்டைப் பொருளை அருகாமையில் கொடுத்தவனும், ஆண்களுக்கு அண்மையில் பெண்களை வைத்தவனுமாகிய அதே இறைவன் தான் ஹராமான படம், பாட்டு, பாணம், பணம் யாவற்றையும் உலகின் எல்லா இடங்களிலும் வைத்துள்ளான். அவை தடுக்கப்பட்டமைக்கான காரணம் ஒன்றே ஒன்று தான். அது, மறைவில் அல்லாஹ்வுக்கு அஞ்சுவதாகும்.

அல்லாஹ் கூறுகிறான், “ஏனென்றால் மறைவில் அவனை யார் அஞ்சுகிறார்கள் என்பதை அல்லாஹ் அறிவதற்காகத்தான்; இதன் பின்னரும் எவர் வரம்பு

மீறுகிறாரோ அவருக்கு நோவினை தரும் வேதனையுண்டு.” (அல்குர்ஆன் 05:94).

மனிதா! ஹஜ்ஜிலிருந்து நீ மீண்டு சென்றபின் அல்லாஹ்வின் அன்பு, பயம், அவன்பால் மீளுதல் என்ற விடயங்களில் உனது போராட்டத்தைத் தொடர்வாயா? உன் இறைவனை மறுமையில் சந்திக்கும் வரை போராடுவாயா?

சகோதர ஹாஜியே! நீ ஊரிலிருக்கும் போது அல்லாஹ்வின் மீது அன்பு வைப்பதாகவும், அவனையே பயப்படுவதாகவும், அவன் மீது சகலதையும் சாட்டுவதாகவும் கூறி வந்தாய். உன் கூற்றின் உண்மையை நிறுவ ஆதாரம் தேவை. உன் கூற்றின் உண்மைக்கு ஆதாரமாய் ஹஜ்ஜு வந்தது. அது உன் அவயவங்கள் உன் நாவை உண்மைப்படுத்திய பின் வந்தது. அல்லாஹ் உன் கூற்றை அங்கீகரிப்பானாயின் உனக்கு நன்மாராயம் உண்டாகட்டுமாக.

“ஒவ்வோர் ஆத்மாவும் தனக்காக வாதாட முற்படும் அந்நாளில், ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அது செய்(து வந்)ததற்குரிய கூலி முழுமையாகக் கொடுக்கப்படும் - அவர்கள் அநியாயம் செய்யப்படவும் மாட்டார்கள்.” (அல்குர்ஆன் 16:111).

எனவே நீர் இம்மாபெரிய நோக்கங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, உனக்காக வாதிடுவாயாக. உனது அவயவங்கள் உனக்காக சாட்சி பகரும். அங்கீகரிக்குமாறு அதிகமாக பிரார்த்தனை செய்வீராக.

சகோதர ஹாஜியே! உன் ஊரிலிருந்து கொண்டு வருடக்கணக்கில் வணக்கத்தில் ஈடுபட்டாலும் அடைய முடியாத அந்தஸ்தை ஹஜ்ஜின் காரணமாக

அடைந்திருப்பதானது அல்லாஹ்வின் பேரருளாகும். அதற்கே நீ அவனை போற்றிப் புகழ்ந்து நன்றியும் செலுத்துவாயாக. நிச்சயமாக நன்றி செலுத்துவதானது செல்வம், பிள்ளைகள் போன்ற அருட்கொடைகளை அதிகரிக்கச் செய்யும்போது ஈமான், இஹ்சான் முதலிய அடிப்படையான நிஃமத்துகளை நிச்சயமாக அதிகரிக்க செய்யும். அல்லாஹ் தயாளனும் அன்புக்கு உரியவனுமாவான். அதிகமாக நன்றி செலுத்துவதில் அல்லாஹ்வை பேணிக்கொள்வீராக.

ஹஜ்ஜின் பின் உன் வாழ்வு முறையை உனக்கு அல்லாஹ் வழங்கிய உயர் நிலையை பேணிக் கொள்வதில் கவனமாய் இரு. அதாவது, நல்ல தோழமை, அதிக பிரார்த்தனை, வீணான இடங்களையும், ஆட்களையும் விட்டு ஒதுங்கி வாழ்தல், ஸாலிஹான நல்லமல்களில் ஈடுபடுதல் முதலியன மூலம் நிலைத்து நிற்கும் காரணிகளை கடைப்பிடிப்பதாகும். எது வரையெனில் நீ அல்லாஹ்வின் திருப்தியை அடைந்து, அவனும் உன்னை திருப்தி கொண்ட நிலையில் மறுமயில் அவனை சந்திக்கும் வரை. “எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டுவாயாக, பின்னர் எங்களுடைய இதயங்களை (அதிலிருந்து) சறுக்கி விடுமாறு செய்து விடாதிருப்பயாக. மேலும் உன் புறத்தில் இருந்து அருளையும் அளிப்பாயாக. நிச்சயமாக நீயே பேரருட்கொடையாளியாவாய்” (அல்குர்ஆன் 03:08)

சர்வ புகழும் உலகைப் படைத்து போசிக்கும் அல்லாஹ் ஒருவனுக்கே உரித்து. எங்கள் தலைவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அன்னாரது தோழர், கிளையார் மீதும்

அல்லாஹு தஆலா அதிகமாக சாந்தியையும் சமாதானத்தையும் சொரிந்தருள்வாயாக.